

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி அம்மூர் பேரூராட்சி வார்டு 11. மேட்டுக்காலனி பகுதியில் அயோத்திதாசர் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.64.33 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள சமுதாயக் கூடம் கட்டுமானப் பணிக்கு அடிக்கல் நாட்டினார். மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ.யு. சந்திரகலா, கழக சுற்றுச்சூழல் அணி மாநிலத் செயலாளர் ஆர். வினோத் காந்தி, ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன். பேரூராட்சி தலைவர் திருமதி. சங்கீதா மகேஷ். துணைத் தலைவர் திருமதி. உஷாராணி அண்ணாதுரை, பேரூராட்சிகள் உதவி செயற்பொறியாளர் திருமதி. அம்சா, செயல் அலுவலர் லோகநாதன், அம்மூர் பேரூர் செயலாளர் பெரியசாமி, அவைத்தலைவர் பிரகாஷ், துணைச் செயலாளர் விக்னேஷ், பொருளாளர் விஜயகுமார், மு.து.தலைவர் ஜோதி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் BLT. சிவா, இளைஞரணி பிரபு, ஒன்றிய பிரதிநிதி ஆஞ்சி,கி.செயலாளர்கள் ஜேம்ஸ்,சேட்டு,நேதாஜி, செந்தாமரை, சுற்றுச்சூழல் பாபு,மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.



வேலூர் மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் மருத்துவர் கோபி தூயவன் மருத்துவமனையை கே.வி. குப்பத்தில் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., டி.எம். கதிர்ஆனந்த் எம்.பி. ஆகியோர் திறந்து வைத்தனர். கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் மாநில துணைச் செயலாளர் சி.கோபி உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

### மகாராஷ்டிராவிலிருந்து

# அனைத்துத் தொழில்களும் குஜராத்திற்கு மாற்றம்!

## ஒன்றிய அரசு மீது மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!



மும்பை, நவ.16-

மகாராஷ்டிராவில் இருந்து அனைத்து தொழில்களையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு குஜராத்துக்கு மாற்றுவதாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம்சாட்டியுள்ளார்.

மகாராஷ்டிர சட்டப்பேரவை தேர்தலையொட்டி புனேவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கலந்து கொண்டு பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது, பேசிய கார்கே, ஒன்றிய பாஜக அரசு, மகாராஷ்டிராவில் இருந்த அனைத்து தொழில்களையும், குஜராத்திற்கு மாற்றுவதாகவும், இதனால் மகாராஷ்டிராவில் பெரும் பொருளாதார இழப்பு, வேலையின்மையை ஏற்படுவதாக குற்றம் சாட்டினார்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும் சோயாபீனுக்கு குவிண்டாலுக்கு 7 ரூபாய் வழங்கப்படும் என உறுதியளித்தார். நாடாளுமன்ற தேர்தலில் 400க்கும் மேற்பட்ட இடங்களில் பாஜக வெல்லும் என கூறுகிறார்கள்.

தற்போது அக்கட்சி 2 ஊன்றுகோலைச் சார்ந்துள்ளதாக விமர்சித்தார்.

பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கள் மூடப்பட்டு விற்பனை செய்யப்பட்டதால் கடந்த 10 ஆண்டுகளில் 5 லட்சம் பேர் வேலை இழந்துள்ளதாக கூறிய கார்கே, மாநிலத்தில் வேலையில்லா திண்டாட்டம் நிலவி வரும் நிலையில் இரண்டரை லட்சம் காலிப் பணியிடங்களை அரசு நிலுவையில் வைத்துள்ளதாகவும் குற்றம்சாட்டினார்.



திருப்பத்தூர் நகர தி.மு.கழக வார்டு செயலாளர்கள், பிரதிநிகள் கூட்டம் நகரச் செயலாளர் எஸ். ராஜேந்திரன், தலைமையில் நடைபெற்றது.இக்கூட்டத்தில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி.எம்.எல்.ஏ. தொகுதி பார்வையாளர் , மாநில கொள்கை பரப்பு இணை செயலாளர் வேலூர்.ஜி.ரமேஷ் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கினர். இக்கூட்டத்தில் கே.பி.ஆர்.ஜோதிராஜன் , மாவட்ட துணை செயலாளர் டி.கே.மோகன் , டி.ரகுநாத் , சு.அரசு , டி. சந்திரசேகர், வி.வடிவேல், வி.மகாலிங்கம் , கோ.செல்வம் , எஸ். தமிழரசி இளங்கோ, ம.பத்மநாபன் , எம்.எஸ்.சவுத் அகமத் , நகர மன்ற தலைவர் திருமதி.வி.சங்கீதா, ஏ.ஆர்.சபியுல்லா மற்றும் பலர் கலந்துகொண்டனர்.




### வயநாடு பேரழிவை

# தேசியப் பேரிடராக அறிவிக்க ஒன்றிய அரசு மறுப்பதா?

## காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி கண்டனம்



புதுடெல்லி, நவ.16-

வயநாடு பேரழிவை ஏற்படுத்திய நிலச்சரிவுகள் இருந்தபோதிலும், அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையாக மோடி தலைமையிலான பா.ஜ.க. ஒன்றிய அதை தேசிய பேரிடராக அறிவிக்க மறுப்பதாக பிரியங்கா காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

வயநாடு மக்களவை தொகுதி காங்கிரஸ் வேட்பாளரும், அக்கட்சி பொதுச் செயலாளருமான பிரியங்கா காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளபதிவில், வயநாடு பேரழிவை சீரமைப்பதற்காக கேரள அரசு நிவாரண தொகையை ஒன்றிய அரசு இதுவரை வழங்கவில்லை என குற்றம் சாட்டினார்.

தேவைப்படுபவர்களுக்கு அத்தியாவசிய நிவாரணங்களை மறுக்கிறது, இது வெறும் அலட்சியம் அல்ல, நினைத்துப் பார்க்க முடியாத இழப்பை சந்தித்தவர்களுக்கு ஒரு அதிர்ச்சியூட்டும் அநீதி என கடுமையாக விமர்சித்துள்ளார். வயநாடு பேரழிவை நேரில் பார்வையிட்டபோதும் பிரதமர் மோடி, அரசியல் காழ்ப்புணர்ச்சியால், கேரள அரசுக்கு பேரிடர் நிவாரணம் வழங்க மறுப்பதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதேபோல இமாச்சலப் பிரதேச மக்களுக்கும் உரிய நிவாரணம் வழங்கப்படவில்லை என சாடினார். இது முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது, இது போன்ற பேரிடர் பாதிப்புகள் கடந்த காலங்களில் ஒருபோதும் அரசியலாக பார்க்கப்படவில்லை என்றும் பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

வயநாடு நிலச்சரிவு விபத்தை தேசிய பேரிடராக அறிவிக்க முடியாது என, கேரளாவுக்கு ஒன்றிய அரசு கடிதம் எழுதியுள்ளது. ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கை மனிதாபிமான மற்ற செயல் என்று கேரள அமைச்சர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

**கேரள அமைச்சர் கண்டனம்**

வயநாடு நிலச்சரிவு விபத்தை தேசிய பேரிடராக அறிவிக்க முடியாது என்று கேரளா அரசுக்கு ஒன்றிய அரசு கடிதம் எழுதி உள்ளது.

வீடுகளை இழந்த பொது மக்களுக்கு இழப்பீடு வழங்கவும், புனரமைப்பு திட்டங்களுக்கும் 3 ஆயிரம் கோடி ரூபாய் வழங்க வேண்டும் என்று கேரளா அரசு கோரியிருந்தது. ஆனால், எந்த தொகையும் இதுவரையும் வழங்கப்படவில்லை. ஆண்டு தோறும் மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மாநில பேரிடர் நிதியிலுள்ள 390 கோடி ரூபாயை வயநாடு பேரிடருக்கு பயன்படுத்தும்படி கடிதத்தில் ஒன்றிய அரசு கூறியுள்ளது.

இதற்கு வருவாய் துறை அமைச்சர் ராஜூ கடும் எதிர்ப்பு கூறியுள்ளார். ஒன்றிய அரசின் இந்த அறிவிப்பு மனிதாபிமானமற்ற செயல் என்று தெரிவித்துள்ளார்.

வயநாடு விபத்தை அதி தீவிர விபத்து என்று L3 பிரிவில் கூட சேர்க்க மறுப்பதாகவும், கேரள மக்களுக்கு எதிராக ஒன்றிய அரசு சவால் விடுவதாக கூறியுள்ளார்.

இதனிடையே, வயநாட்டுக்குப் பிறகு மழை, புயல் பாதிப்பு ஏற்பட்ட ஆந்திராவுக்கு சிறப்பு நிதி வழங்கிய பாஜக அரசு கேரளாவுக்கு ஏன் வழங்கவில்லை? என்று காங்கிரஸ் கேள்வி எழுப்பியுள்ளது. ஒன்றிய அரசின் இந்தப் புறக்கணிப்புக்கு எதிராக தீவிர போராட்டம் நடத்தப்படும் என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் தெரிவித்துள்ளார்.

### திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமை! திருவள்ளூர் மேற்கு மாவட்ட

# நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பி.ஜி.சிவகுமார் இல்லத் திருமண வரவேற்பு!

## அமைச்சர்கள் ஆர்.காந்தி – ஆவடி சா.மு.நாசர் மற்றும் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. வாழ்த்து!



திருவள்ளூர், நவ. 16 -

திருவள்ளூர் மேற்கு மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பி.ஜி. சிவகுமார் இல்லத் திருமண வரவேற்பு விழா இன்று (16.11.2024 சனிக்கிழமை) மாலை 6.30 மணிக்கு, பொதட்டூர்பேட்டை, திருத்தணி ரோடு, ஸ்ரீ அம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பி.ஜி. சிவக்குமார் வரவேற்புரை ஆற்றுகிறார்.

பொதட்டூர்பேட்டை பேரூர் செயலாளர் டி.ஆர். கே.பாபு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.எம்.சுகுமார், மாவட்ட பிரதிநிதி ஜெ.எம். சங்கரன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் இ.கே.உதயசூரியன், மாவட்டப் பிரதிநிதி ஜெ.டி.சஞ்சய் காந்தி, முன்னாள் பகுதிச் ஒன்றியச் செயலாளர் பி.ரவிந்திரநாத் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் கழக கொள்கை பரப்புச் செயலாளர், முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் ஆவடி சா.மு. நாசர், இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இவ்விழாவில் அன்பகம் கலை, வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ, இ.எஸ்.எஸ். இராமன், திருத்தணி எம். பூபதி, ஓ.ஏ.நாகலிங்கம், கே.ஜி.வி.உமா மகேஸ்வரி, டி.அன்பழகன், ஆர். வினோத் காந்தி, கே.திராவிடபக்தன், வி.சி.ஆர்.குமரன், பா.சிட்டிபாபு, ராஜேஸ்வரி ரவிந்த்ரநாத், மிதுன் சக்கரவர்த்தி, கிஷோர் ரெட்டி, உதய மலர் பொன்பாண்டியன், ஜெயபால், பொன்.சு.பாரதி, எஸ். ஆர்.செங்குட்டுவன், சி.எம்.இரவி, கே.எம். சுப்பிர மணி, ஸ்ரீதர், மு.நாகன், கே.எஸ். அசோக்குமார், ஜி.ரவீந்திரா, பா.ஆர்த்தி ரவி, என்.கே.கிருஷ்ணன், பி. பழனி, சி.என்.சண்முகம், ஜி.ஜெ.சீனிவாசன், பி.டி.சந்திரன், கூளூர் ராஜேந்திரன், சி.சு.ரவிச்சந்திரன், எஸ். மகாலிங்கம், மோ.ரமேஷ், அன்பரசு, வி.வினோத் குமார்,

சி.ஜெ.செந்தில்குமார் மற்றும் கழக அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

பி.எஸ்.மேகவர்ணம், பி.எஸ்.சதீஷ்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியத்திற்குட்பட்ட லக்கிநாயக்கன்பட்டி ஊராட்சி, ஜல்லியூர் கிராமத்தில் பகுதி நேர நியாயவிலைக் கட்டிடம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.5 லட்சமும், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சின்னகண்ணாலப்பட்டி கிராமத்தில் பல்நோக்கு கட்டிடம் ரூ.5லட்சமும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் (MGNREGS) வாயிலாக அங்கன்வாடி கட்டிடம் ரூ.14 லட்சம் ஆக 24 லட்சம் மதிப்பீட்டில் பணிமுடிக்கப்பட்ட புதிய கட்டிடங்களை ஏ.நல்லதம்பி எம்.எல்.ஏ.பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்.க.முருகேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர். கு.இராஜமாணிக்கம்,துணை சேர்மென். ஜி.மோகன்குமார், ஒன்றிய கவுன்சிலர்.சாந்தகுமார் ஊராட்சி மன்ற தலைவர்.லட்சுமி முனிசாமி, மாவட்ட பிரதிநிதிகள். கருணாநிதி, சி.கே.சுப்பிரமணி, அண்ணாசாமி,சதாசிவம்,பாலு மற்றும் பலர் பங்கேற்றனர்.



கடலூர் மாவட்ட மைய நூலகத்தில் 57 வது தேசிய நூலக வார விழாவை முன்னிட்டு புத்தக கண்காட்சி திறப்பு விழா நடைபெற்றது. இதில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.அய்யப்பன் எம்.எல்.ஏ., தலைமை தாங்கி, புத்தக கண்காட்சியை திறந்து வைத்து, முதல் விற்பனையை துவக்கி வைத்தார். வாசகர் வட்டத் தலைவர் பாஸ்கரன், கவுரவத் தலைவர் சுதர்சனம் முன்னிலை வகித்தார். மாவட்ட நூலக அலுவலர் பொறுப்பாளர் சக்திவேல் வரவேற்றார். விழாவை ஒருங்கிணைப்பாளர் பால்கி ஒருங்கிணைப்பு செய்தார். பேராசிரியர் ராஜா வாழ்த்திப் பேசினார். முதல் நிலை நூலகர் பொறுப்பாளர் ஆறுமுகம் நன்றி கூறினார்.